பாடம் 11

# தேவன் வழிநடத்துகிறார்

***திடீரென்று விருந்து ஒன்று ஆயத்தம் செய்யப்பட்டு அதற்கு நீ அழைக்கப்பட்டால் எப்படியிருக்கும்? அத்தகைய அருமையான விருந்துக்குப் போக நீ மிகவும் ஆசையா யிருந்தும் போகமுடியாவிட்டால் உனக்கு எப்படியிருக்கும்? மோசேக்கும் அப்படித்தான் இருந்தது. அவர் ஆசைப்பட்ட கானானுக்குள் போகமுடியாமல் போயிற்று.***

தேவனுடைய வழிநடத்து தலின்படி இத்தனை ஆண்டு காலமாக மோசே இஸ்ரவேலை பத்திரமாகநடத்தி வந்தார். எகிப்திலிருந்து கானான் தேசத் தின் எல்லை வரையிலும் வந்தா யிற்று. காணானுக்குள் இனி அவர்கள் நுழைய வேண்டியது தான். மோசேக்கும் இஸ்ர வேலருடன் கானான் தேசத்திற் குள் செல்ல ஆசையாயிருந்தது. ஆனால், தேவன் அனுமதிக்



காததால் மோசே இஸ்ரவேல ரிடம் விடைபெறவேண்டிய தாயிற்று.

எனவே மோசே, இன் றைக்கு நாம் உபாகமம் என்ற ழைக்கும் புத்தகத்திலே இஸ்ர வேலர் கடைப்பிடிக்கவேண் டிய யாவையும் எழுதினார். தேவன் அவர்களுக்காகச் செய்த அற்புதமான, அதிசய மான செயல்களையெல்லாம் எழுதினார். ‘வாழ்நாள் முழு வதும் தேவனையே சேவிக்க, ஆராதிக்க ஒருபோதும் மறவாதே’ என்று எழுதினார்.

பின்னர் இஸ்ரவேலரிடம் பேசத்தொடங்கினர். ‘‘எனக்கு இப்போது 120 வயதாகிறது. நானே எப்போதும் உங்கள் தலைவனாக இருக்கமுடியாது. இந்த யோர்தானைக் கடந்து அந்தக் கானானுக்கு நான் போகமுடியாது என தேவன் சொல்லிவிட்டார். எனவே, எனக்குப் பின் உங்களை வழிநடத்த, ஒரு தலைவனை ஏற்படுத்துமாறு தேவன் சொல்லியிருக்கிறார்’’ என்று சொல்லி, யோசுவைத் தன் அருகே அழைத்தார். தன் கைகளை

## மனன வசனம்

**உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு ...**
**நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில்**
**சேர்த்துக்கொள்வேன். யோசுவா 14:3.**

யோசுவாவின்மேல் வைத்தார். ‘‘யோசுவா, இனி இந்த இஸ்ரவேலரை நீதான் வழிநடத்த வேண்டும். தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடு இருந்து உன்னை நடத்துவார். கலங்காதே; தேவன் உன்னை ஒருபோதும் கைவிடமாட்டார். எனவே, பயப்படாமல், தைரியமாக இரு’’ என்றார் மோசே.

பின்னர் மோசே கர்த்தருடைய உடன்படிக்கையைச் சுமக்கும் லேவியரிடம், ‘‘நீங்கள் இந்த நியாயப்பிரமாணப் புத்தகத்தை கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு அருகே வையுங்கள் என்றார். பின்னர் ஆசாரியர்களிடம், ‘‘விடுதலையின் வருஷமாகிய ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலே, கூடாரப் பண்டிகையின்போது தேவன் சொல்லும் இடத்தில் இஸ்ரவேலர் எல்லாரும் கூடிவந்திருப்பார்கள்; அப்போது, இந்த நியாயப்பிரமாணத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேட்க, அவர்கள் முன்பாக நன்றாய் வாசிக்கவேண்டும்’’ என்றும் சொன்னார்.

மீண்டும் ஒருமுறை இஸ்ரவேலரிடம் மோசே ஆலோசனை கூறினார். ‘‘தேவனை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட கற்பனைகளையும், வழிகளையும் விட்டு விலகாதிருங்கள்’’ எனக்கூறி இஸ்ரவேலரிடமிருந்து பிரியா விடைபெற்றார்.

மோசேயைப் பிரிய மனமில்லாமல் இஸ்ரவேலரும் மிகவும் அழுதார்கள். தேவன் சொன்னபடி, அன்றைகே மோசே நேபோவில் இருக்கும் பிஸ்காவின் கொடு முடியில் ஏறினார். வாக்குப்



## செய்தி

**நாம் நித்திய காலமும் தேவனோடு இருந்து, அவரைத் தொழப்போவதற்காக அவருக்கு நன்றி.**

பண்ணப்பட்ட கானான் தேசத்தை தேவன் மோசேக்குக் காண்பித்தார். பின் மோசே மரித்தார். தேவனே மோசேயை அடக்கம் பண்ணினார். மோசே மரிக்கிறபோது 120 வயதாயிருந்தது. ஆனாலும் மோசே கல்லறையிலே இருந்துவிடவில்லை. தேவன் மோசேயை எழுப்பித் தம்முடைய பரலோகத்திற்குக் கொண்டுபோய்விட்டார்.

மோசேயைப் போன்ற அருமையான ஒரு தீர்க்கதரிசி அதன் பின்னர் எழும்பியதில்லை; ஏனெனில் மோசே கர்த்தரை முகமுகமாய் அறிந்தவனாயிருந்தான் என வேதம் கூறுகிறது.

என் கண்மணியே! நீயும் மோசேயைப்போல கர்த்தருக்காய் வாழ்வாயா?

## புதிர் 11

**செய்முறை:**

*இவ்வாரப் பாடத்தை நன்கு படித்து விட்டு, பொருத்துக.*



| | |
|---|---|
| யோசுவா | கோல் |
| தேவனாகிய கர்த்தர்தாமே | 120 வருடம் வாழ்ந்தார் |
| மோசே | உன்னோடு இருந்து உன்னை நடத்துவார் |
| ஒவ்வொரு ஏழாம் வருடத்திலும் | நியாயப்பிரமாணத்தை வாசிக்க வேண்டும் |
| மோசேயின் கையில் | படத்திலுள்ள இளைஞர் |